# அன்பரின் ஊழியம்

# ANBARIN OOZHIYAM

மலர்:10 இதழ்:4 ஏப்ரல் 2024 தனிப்பிரதி- ரூ.20/- ஆண்டு சந்தா- ரூ.200/-
VOL: 10 ISSUE NO : 4 April 2024 Single Copy - Rs 20/- ANNUAL SUBSCRIPTION: RS 200/-





# Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் மூலம் கர்த்தர் செய்த அற்புதம்

## அரசு வேலை கிடைத்தது



எனக்கு அப்பா அம்மா இல்லை. அதனால் சிறுவயதிலிருந்தே கஷ்டப்பட்டுதான் வளர்ந்தேன். சில நேரங்களில் வாழ வழி தெரியாமல் திக்கு தெரியாமல் எல்லாம் இருந்திருக்கிறேன். தேவ கிருபையால் படித்து முடித்தேன். ஆனால் வேலை இல்லை.

ஒருநாள் என் தோழி அன்பரின் ஊழிய பத்திரிக்கையை எனக்கு கொடுத்தாள். அதில் எழுதப்பட்ட செய்திகள், சாட்சிகள் அனைத்தும் என் மனதை தொட்டது. ஒருநாள் இன்டர்வியூ போவதற்குமுன் அன்பரின் ஊழியத்திற்கு போன் மூலம் தொடர்புக் கொண்டு **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் எனக்காக ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டேன். சகோதரர் எனக்காக பாரத்துடன் ஜெபித்துவிட்டு, "உனக்கு வேலை கிடைக்கும்" என கூறினார்கள். தேவ கிருபையால் இன்டர்வியூ-ல் தேர்வு செய்யப்பட்டேன். கடந்த 13 ஆண்டுகளாக அரசு ஆசிரியையாக பணியாற்றி வருகிறேன். என்னை உயர்த்திய கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன். சகோதரருக்கும் என்னுடைய நன்றியை தெரிவிக்கிறேன்.

ஒவ்வொரு வருடமும் என்னிடம் படிக்கிற 10 மற்றும் 12 வகுப்பு மாணவ மாணவியர்களின் நல்ல ரிசல்ட்க்காக ஜெபிக்கும்படி அன்பரின் ஊழியத்திற்கு கடிதம் மூலம் கேட்டுக்கொள்வேன். கர்த்தர் மகத்தான வெற்றியை அவர்களுக்கு தந்துக் கொண்டிருக்கிறார்.

என் உடன் வேலை செய்யும் ஆசிரியருக்கு 5 வருடங்களாக குழந்தை இல்லை. கடந்தவருடம் திருச்சி அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு வந்திருந்தப்பொழுது, ஜெப விண்ணப்பத்தில் அவர்களுக்காக ஜெபிக்கும்படி எழுதியிருந்தேன். தற்பொழுது அவர்கள் இரண்டு மாத கர்ப்பிணியாக இருக்கிறார்கள். இந்த ஸ்தலத்தில் ஏறெடுக்கப்படும் ஜெபத்திற்கு கர்த்தர் அற்புதமாக பதில் தந்துக்கொண்டிருக்கிறார். ஆகவே கர்த்தரை மனதார துதிக்கிறேன்.

**– சகோதரி. மரிய டெய்சி விஜயா, அரியலூர்.**

# அன்பரின் ஊழியம்

## உங்கள் ஆசிரியரிடமிருந்து...



Dr. ஜேன் ஜாஷ்வா

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளுக்கு நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மகத்தான வல்லமையுள்ள நாமத்தில் அன்பின் வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன்.

தப்புவிக்கிறவரும், இரட்சிக்கிறவரும் நம் ஆண்டவர் ஒருவரே. அவரே ஜீவனுள்ள தேவன், அவருடைய ராஜ்யம் அழியாதது, முடிவு பரியந்தமும் நிலைநிற்கக்கூடியது என்பதை உணர்ந்து, அவரை உளமார விசுவாசித்து, அந்த ராஜ்யத்திற்காக உழையுங்கள். உங்கள் காரியங்கள் அனைத்தும் ஜெயமாயிருக்கும்.

அவர் ஜீவனுள்ளதேவன், அவர் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறவர்: அவருடைய ராஜ்யம் அழியாதது, அவருடைய கர்த்தத்துவம் முடிவு பரியந்தமும் நிற்கும்.

தானியேலைச் சிங்கங்களின் கைக்குத் தப்புவித்த அவரே தப்புவிக்கிறவரும் இரட்சிக்கிறவரும், வானத்திலும் பூமியிலும் அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்கிறவருமாயிருக்கிறார். தரியுவின் ராஜ்யபார காலத்திலும், பெர்சியனாகிய கோரேசுடைய ராஜ்யபார காலத்திலும் தானியேலின் காரியம் ஜெயமாயிருந்தது. தானியேல் 6:26–28

தானியேலைப் போல உங்கள் ஜெபங்களை அதிகப்படுத்துங்கள். தேசத்திற்காக ஜெபியுங்கள். நடைபெறபோகும் நாடாளுமன்ற தேர்தல் மற்றும் சட்டமன்ற தேர்தல்களுக்காக ஜெபியுங்கள். தேவன் தமக்கு சித்தமானவர்களை ஆளுகையில் அமர்த்த, நம் அனைவருடைய எதிர் காலத்திற்காக ஜெபியுங்கள். எஸ்தரை போல ஜெபித்து காரியங்களை நிர்ணயம் பண்ண தேவன் நம்முடைய கரங்களிலே அதிகாரத்தை கொடுத்துள்ளார். எனவே ஊக்கமாய் ஜெபியுங்கள். தானியேலின் காரியம் ஜெயமாயிருந்தது என்ற வசனத்தின்படி கர்த்தர் தாமே உலகெங்கும் அரசாளுகிறார் என்பதை நம்முடைய ஜெபங்கள் உலகத்திற்கு வெளிக்காட்டும்.

கடந்த மாதத்தில் எங்கள் அப்பாவின் பிறந்த நாளை முன்னிட்டு நீங்கள் நேரில் வந்திருந்து உங்கள் வாழ்த்துக்களையும், அன்பளிப்புகளையும் கொடுத்து சிறப்பித்தீர்கள். விசேஷமாக அப்பாவின் நல்ல சுகத்திற்காக ஜெபித்தும் சென்றீர்கள். உங்கள் அனைவருக்கும் எங்களுடைய நன்றியை அன்போடு தெரிவிக்கிறோம். எங்கள்மேல் நீங்கள் வைத்திருக்கிற அன்பை நினைத்து எங்கள் உள்ளம் மகிழ்ந்தது.


**ஆசிரியர் / வெளியிடுபவர்: Dr. ஜேன் ஜாஷ்வா**

**சந்தா விபரம்**

இந்தியா : ஆண்டு சந்தா ரூ.200/- ஆயுள் சந்தா ரூ.2000/-
வெளிநாடு : ஆண்டு சந்தா ரூ.1500/- ஆயுள் சந்தா ரூ.15000/-



காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை

ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: +91 9488845627

Telugu & Hindi : +91 99445 36343, Malayalam: +91 94889 32937, kannada: +91 90031 17205

e-mail:info@mojindia.org Website: www.ministryofjesus.in

முகவரி: அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம், 10-வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி -18

Address: Ministry of Jesus Prayer Centre, 10th Cross Street West Extension, Thillainagar, Trichy- 620018

நீங்கள் திருச்சி மற்றும் திருச்சியை சுற்றி எங்கிருந்தாலும் அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்திற்கு நேரில் வந்து ஜெபித்து செல்லலாம்.

உங்கள் பகுதியில் கூட்டம் நடத்த விரும்புகிறவர்கள் தொலைபேசி மூலமாக எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள். கடந்த மாதம் நடைபெற்ற கூட்டங்களை கர்த்தர் ஆசீர்வதித்தார்.

ஏப்ரல் மாதம் மார்த்தாண்டம், திருநெல்வேலி, சென்னை, ஹைதராபாத், ஈரோடு, கோயம்புத்தூர், திருச்சி மற்றும் மே 1-ம் தேதி மேற்கு தாம்பரம், நாகர்கோவிலில் நடைபெறயிருக்கிற அனைத்து கூட்டங்களுக்காகவும் தொடர்ந்து ஜெபியுங்கள். இந்த கூட்டங்களை நடத்துவதற்கு நாம் இலட்சங்களை செலவு செய்கிறோம். உங்கள் குடும்பத்தின் சார்பாக ஒரு கூட்டத்தை நடத்துவதற்கு நீங்கள் உதவி செய்யுங்கள். கர்த்தர் நிச்சயமாக அதற்குரிய பலனை பல ஆயிரம் மடங்காக தந்து ஆசீர்வதிப்பார்.

தொடர்ந்து ஊழியத்திற்காகவும், S.J.Saves Trust-ன் பணிகளுக்காகவும், S.J.S.T.மருத்துவமனை பணிக்காகவும் ஜெபியுங்கள்.

எங்கள் அப்பாவின் நல்ல சுகத்திற்காகவும், நீடிய ஆயுளுக்காகவும் ஜெபியுங்கள். எங்கள் அம்மாவின் நல்ல சவுக்கியத்திற்காகவும் ஜெபியுங்கள். எங்கள் அனைவருடைய உடல் நலன் மற்றும் போக்கிலும் வரத்திலும் தேவ பாதுகாப்பு உண்டாக ஜெபியுங்கள்.

கிறிஸ்துவின் பணியில்

**Dr. ஜேன் ஜாஷ்வா**

## இம்மாத வாக்குத்தத்த வசனங்கள்

**சங்கீதம் 31:20,21; கொலோசெயர் 2:15; 1கொரிந்தியர் 15:57**





# நிழல்

தேவ செய்தி : Dr. ஜேன் ஜாஷ்வா

கிறிஸ்துவுக்குள் பிரியமான பங்காளர்களே, பத்திரிக்கை வாசகர்களே, உங்கள் ஒவ்வொரு வரையும் நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் அன்போடு வாழ்த்துகிறேன். நான் என் வார்த்தையை உன் வாயிலே அருளி, என் கரத்தின் நிழலினால் உன்னை மறைக்கிறேன். ஏசாயா 51:16

மேற்கூறிய வசனத்தில் ஒரு பகுதியான “என் கரத்தின் நிழலினால் உன்னை மறைக்கிறேன்” என்பதைக்குறித்து மட்டும் நாம் தியானிப்போம். இதே வசனம் அவர் என் வாயைக் கூர்மையான பட்டயமாக்கி, தமது கரத்தின் நிழலினால் என்னை மறைத்து, என்னைத் துலக்கமான அம்பாக்கி, என்னைத் தமது அம்பறாத்தூணியிலே மூடிவைத்தார். ஏசா 49:2–ல் பார்க்கிறோம்.

ஏசாயா 51ம் அதிகாரத்தில் ஆபிரகாமை கர்த்தர் எப்படி அழைத்தார்? தனி ஒருவனை எப்படி பெரிய ஜாதியாக்கினார்? அந்த பெரிய ஜனம் ஆண்டவரை மறந்தப்பொழுது, அவர்களுக்கு தேவன் ஆறுதல் செய்து, திரும்ப அழைத்து வந்து, தம் கரத்தின் நிழலினால் மறைப்பதைக் குறித்து தீர்க்கதரிசி மூலம் இஸ்ரவேல் ஜனத்திற்கு சொல்லப்பட்டது.

தேவனுடைய கரத்தின் நிழல், உன்னதமான வரின் மறைவு, சர்வ வல்லவரின் நிழல் என வேதத்தில் நாம் வாசித்திருக்கிறோம். ஆண்டவர் தம் கரத்தின் நிழலினால் உங்களை மறைக்கிறேன் என சொல்வதற்கான காரணம் என்ன? அதன் முக்கியத்துவம் என்ன என்பதை நாம் முதலில் அறிந்துக் கொள்ளவேண்டும்.

நீங்கள் என் ஜனம் என்பதை உலகிற்கு அறிவிப்பதற்காகவே தேவன் தம் கரத்தின் நிழலில் உங்களை மறைக்கிறேன் என்று சொல்கிறார். கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் மற்றும் அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் கர்த்தர் தம் கரத்தின் நிழலினால் மறைக்கிறார். இது ஒரு அடையாளம். நீங்கள் என்னுடைய ஜனம் என அனைவரும் அறியவே தம் கரத்தின் நிழலினால் உங்களை மறைக்கிறார்.

ஒரு குடும்பத்தில் உள்ள பிள்ளைகளை பெற்றோர் சரியாக கவனிக்காத பட்சத்தில், பிள்ளைகளோடு நேரத்தை செலவழிக்காத பட்சத்தில் அந்த பிள்ளைகள் வெளியில் சென்று தனக்கான நண்பர்களை தேடிக்கொண்டு, இது என் நண்பன், இவன் என்னுடையவன் என சொல்லி தங்களுக்கு என ஒரு புது சொந்தத்தை ஏற்படுத்திக்கொள்கிறார்கள். இன்றைக்கு பல குடும்பங்களில் உறவுகள் சரியில்லாத காரணத்தினால், அன்பில்லாத காரணத்தினால் குடும்பங்கள் பிரிந்துப்போவதை நாம் பார்க்கிறோம். பலர் சோர்வுக்கு உள்ளாகி மனஅழுத்தத்தில் வாழ்ந்துக் கொண்டிருக்கிறதையும் நாம் அறிவோம். இப்படிப்பட்ட உலகத்தில் நம்மை தம்முடையவர்கள் என்று சொல்லி நம்மைப்பார்த்து பெருமைப்பாராட்டி தேவன் தாமே மகிழ்கிறார்.

கர்த்தருடைய கரம் எப்படிப்பட்ட கரம்? அவருடைய கரம் மிகவும் வல்லமையானது. அவருடைய கரத்தின் கிரியைகள் மகத்துவ மானவைகள். உலகத்திலே இன்றைக்கு பெரிய பெரிய அரசியல் அந்தஸ்து உள்ளவர்கள் அனைவரையும் பார்த்து மக்கள் கணக்கு கேட்கும் அளவிற்கு தள்ளப்படுகிறார்கள். இதுதான் நாம் வாழும் உலகம். ஆனால் ஆண்டவரைப் பார்த்து நாம் கணக்கு கேட்க முடியாது. என்ன செய்கிறீர் என கேட்டு அவருடைய கரத்தை தடுத்து நிறுத்த முடியாது. (தானியேல் 4:35) அத்தகைய வல்லமையுள்ள கரத்தின் நிழலினால் நம்மை மூடி மறைத்துக்கொள்கிறார்.

அடுத்து அவருடைய நிழல் என சொல்லும்பொழுது அந்த நிழல் நமக்கு ஆறுதல் தருகிற இடமாக, ஒத்தாசை செய்கிற இடமாக இருக்கிறது. வெயில் நேரத்தில் மரத்தின் நிழலில் இருப்பது அதிக குளிர்ச்சியாக இருக்கும். அதேப்போல அவருடைய கரத்தின் நிழல் நமக்கு ஒரு மறைவு, நமக்கு ஆறுதல்

தரும் இடம், ஒத்தாசை செய்யும் இடம், அத்தகைய நிழலுக்குள் நாம் இருக்கும்பொழுது நமக்கு பெரிய இளைப்பாறுதல் கிடைக்கிறது. பெரிய சந்தோஷம் உண்டாகிறது. சமாதானம் கிடைக்கிறது. ஆறுதல் கிடைக்கிறது.

## என் வார்த்தையை உன் வாயில் அருளுவேன்!

இந்த வசனத்தில் என் வார்த்தையை உன் வாயில் அருளுவேன் என்றும் ஆண்டவர் சொல்கிறார். இதே காரியத்தை ஏசாயா 49:2–லும் நாம் பார்க்கமுடியும். "நான் உன்னை துலக்கமான அம்பாக்கி என் வார்த்தையை உன் வாயில் அருளுவேன்." ஆண்டவருடைய வார்த்தை என் வாயில் கண்டிப்பாக அருளப்பட வேண்டுமா என ஒரு வேளை நீங்கள் நினைக்கலாம். நான் ஊழியக்காரன் இல்லையே, நான் ஊழியக்காரி இல்லையே எனக்கு எப்படி ஆண்டவர் தம் வார்த்தையை அருளமுடியும் என யோசிக்கலாம்.

இந்த உலகத்தின் காரியங்கள் மாறினாலும் நான் மாறாதவர், என் வார்த்தை மாறாது என்பதை உணர்த்தவே, என் கரத்தின் நிழலினால் உன்னை மறைக்கிறேன் என ஆண்டவர் சொல்கிறார். இது சாதாரண ஒரு காரியம் அல்ல. வேதத்தை நன்கு படிக்கும்பொழுது அவருடைய கரம் எவ்வளவு மகிமையானது என்பதை தெளிவாக அறிய முடியும். "நான் பூமியை உண்டுபண்ணி, நானே அதின்மேல் இருக்கிற மனுஷனைச் சிருஷ்டித்தேன், என் கரங்கள் வானங்களை விரித்தன, அவைகளின் சர்வ சேனையையும் நான் கட்டளையிட்டேன். ஏசாயா 45:12. தண்ணீர்களைத் தமது கைப்பிடியால் அளந்து, வானங்களை ஜாணளவாய்ப் பிரமாணித்து, பூமியின் மண்ணை மரக்காலில் அடக்கி, பர்வதங்களைத் துலாக்கோலாலும், மலைகளைத் தராசாலும் நிறுத்தவர் யார்? ஏசாயா 40:12. நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர், வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியையாயிருக்கிறது." சங்.102:25

தேவனுடைய கரங்கள் வானங்களை விரித்தன. அவர் தம் கரத்தினால் பூமியை தாங்குகிறார். அண்டசராசரங்கள் அனைத்தும் அவருடைய கரத்தின் வல்லமையினால் உண்டாக்கப்பட்டது. இத்தகைய மகிமையான கரத்தினால் நம்மை மூடி மறைத்துக் கொள்கிறார். அந்த மகிமையான கரம், வல்லமையான கரம், நீதி செய்கிற கரத்தினால் நம்மை தாங்குகிறார். கர்த்தருடைய புயம் – அவருடைய கரம் உங்கள் பட்சமாய் இருக்கிறபடியால் நீங்கள் எதற்கும் கலங்கவேண்டாம். என் புயங்கள் ஜனங்களை நியாயந்தீர்க்கும், தீவுகள் எனக்குக் காத்திருந்து, என் புயத்தின்மேல் நம்பிக்கையாயிருக்கும். ஏசாயா 51:5. ஆம். கர்த்தருடைய புயம் நம் பட்சமாய் இருக்கிறது.

### 1. பிசாசிடமிருந்தும் அவனுடைய சேனைகளிடமிருந்தும் நம்மை பாதுகாக்கும் கரம்

கர்த்தருடைய கரத்தின் நிழலில் நாம் இருக்கும்பொழுது கர்த்தர் நம்மை பிசாசிடமிருந்தும், பிசாசின் சேனைகளிடமிருந்தும், பிசாசின் ஆக்ரோஷமான காரியங்களிலிருந்தும் நம்மை பாதுகாக்கிறார்.

ஒரு நாள் நான் ஜெபித்துக்கொண்டிருந்தப் பொழுது ஆண்டவர் ஒரு தரிசனத்தை காட்டினார். அந்த தரிசனத்தை என்னால் மறக்க முடியவில்லை. அந்த அளவிற்கு அது பயங்கரமாக இருந்தது. நான் பார்த்தபொழுது தெருக்களில் பயங்கரமான இருள். அந்த இருளில் கருப்பு நிற குதிரைகளில் அமர்ந்தவாறு போருக்கு போகிற பயங்கரமான பெரிய கூட்டத்தைப் பார்த்தேன். அவர்களை சுற்றிலும் அடர்ந்த புகை படலம் காணப்பட்டது. அந்த குதிரையின் தோற்றம், குதிரையில் ஏறியிருந்தவர்களின் தோற்றம் பெரிய திகிலை ஏற்படுத்தியது. கொடூரமான பெரிய சேனையாக போய்கொண்டிருந்தார்கள். தலைப்பாகை அணிந்தவர்களாய் முடிவே இல்லாத அந்த பெரிய சேனையின் தோற்றம் அனைத்தும் பயங்கரமாக இருந்தது. அந்த குதிரையில் அமர்ந்திருந்தவர்கள் சாதாரண மனிதர்களாக இல்லை. நமக்கு பயத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் அவர்கள் கையில் இருந்த வாள், தலைப்பாகை, தோற்றம் அனைத்தும் பயங்கரமாக இருந்தது. ஜனங்கள் அந்த பெருங் கூட்டத்தை பார்த்து பயந்தவர்களாய் யாருமே வெளியில் வரவில்லை. அனைவரும் கதவை பூட்டிக்கொண்டு வீட்டிற்குள் இருக்கின்றனர். எந்த இடத்திலும் சின்ன வெளிச்சம்கூட தெரியவில்லை.

இதைக்கண்டு நான் நடுங்கினப்பொழுது, ஆண்டவர் என்னைப் பார்த்து பொறுமையாக இரு. அந்த வீடுகளுக்கு பக்கத்தில் இருக்கிற மரங்களில் பார் என்று சொன்னார். நான் பார்த்தப்பொழுது மரங்களுக்குள்ளிருந்து சின்ன சின்ன ஒளி தெரிந்தது. இந்த வெளிச்சம் என்ன? மெதுவாக இவை அதிகரிக்க ஆரம்பித்தது. அந்த காரிருளின் மத்தியில் இலட்சக்கணக்கான மின்மினி பூச்சிகள் மிகுந்த ஒளி வீசி வானத்திற்கு நேரே எழும்பின. அந்த கொடூரமான சேனைகளால் இந்த பூச்சிகளை ஒன்றும் செய்ய இயலவில்லை. ஆம் பரிசுத்த ஆவியானவர் என்னிடம் கூறியது, சீக்கிரத்தில் இந்த உலகத்தை நான் பிசாசின் சேனைக்கு ஒப்புக்கொடுக்கப்போகிறேன். இந்த காலத்திலே என்னுடைய ஜனத்தை, என்னால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களை நான் மின்மினி பூச்சிகளாக வைத்திருக்கிறேன். பிசாசின் சேனைகளால் மின்மினி பூச்சிகளை ஒன்றும் செய்ய முடியாது என்றார். ஆம் பிரியமானவர்களே, ஆண்டவருடைய கரத்தின் நிழலில் நீங்கள் இருக்கும்பொழுது உங்களை அநேகருக்கு வெளிச்சம் தரக்கூடியவர்களாய் மாற்றுவார்.

வரும் காலங்களிலும் மக்களுக்குள் பயங்கரமான ஒருவித பயம் ஏற்படும். பிசாசை குறித்த பயம், உலகத்தைக் குறித்த பயம் இன்றும் அநேகருக்கு இருக்கிறது. பயப்படுகிறவர்களுக்கு பரலோகத்தில் இடம் இல்லை என வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது. (வெளி.21:8) நீங்கள் பிசாசை பார்த்து பயப்பட போகிறீர்களா? இல்லை ஆண்டவருடைய கரத்தின் நிழலில் இருக்கப்போகிறீர்களா? பிசாசு வஞ்சிக்கிற ஆவியாக எவனை விழுங்கலாம் என வகைதேடிச் சுற்றித்திரிகிறான். தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள், ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். 1பேதுரு 5:8.

இதோ, நான் தேசத்தின்மேல் பஞ்சத்தை அனுப்பும் நாட்கள் வரும். ஆகாரக் குறைவினால் உண்டாகிய பஞ்மல்ல, ஜலக்குறைவினால் உண்டாகிய தாகமுமல்ல, கர்த்தருடைய வசனம் கேட்கக் கிடையாத பஞ்சத்தை அனுப்புவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். ஆமோ 8:11–ல் வேதவசனம் கிடைக்காத பஞ்சத்தை அனுப்புவேன் என ஆண்டவர் சொல்லிருக்கிறார். இன்றைக்கு பைபிள் நிறைய கிடைக்குதே, வசனம் கிடைக்காத பஞ்சம் எப்படி வரும் என நீங்கள் நினைக்கலாம். அந்த பஞ்சம் அல்ல. வேத வசனம் இருக்கும். ஆனால் போதனைகள் அனைத்தையும் மனிதருக்கு ஏற்றவகையில் பிசாசு மாற்றி கொடுப்பான். பைபிள் இருக்கும். ஆனால் நீ எதைஎப்படி செய்தாலும் பரவாயில்லை. நீ பரலோகம் சென்றுவிடுவாய் என்று சொல்லப்படும். இயேசு கிறிஸ்துவுக்கும், சிலுவைக்கும் முக்கியத்துவம் கொடுக்காத வேதாகம புத்தகங்கள் உலகில் பின்பற்றப்படும். இதுதான் கடைசி காலம்.

ஏனெனில் கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள். மாற்கு 13:22. இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ள தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள் யார்? நம்மைப்போல இயேசுகிறிஸ்துவை அறிந்தவர்கள். இயேசுவிற்காக சாட்சியாக வாழ்ந்துக் கொண்டிருப்பவர்கள், கிறிஸ்துவின் அன்பிற்காக வைராக்கியம் பாராட்டுகிறவர்கள், பரிசுத்தவான்கள் என சொல்லிக்கொண்டே போகலாம். இவர்களும் வஞ்சிக்கப்படத்தக்க வகையில் பிசாசு கிரியை செய்வான். இப்படிப்பட்ட வஞ்சனையான காரியங் களிலிருந்து தப்பித்துக்கொள்ள அவர்களுக்கு கர்த்தருடைய கரத்தின் நிழல் தவிர வேறு இடம் இல்லை. அவருடைய கரத்தின் நிழல்மட்டும் தான் உள்ளது. அந்த கரத்திலிருந்து ஒருவனும் உங்களை பறித்துக்கொள்ள முடியாது என்பதை உணர்ந்து விசுவாசமாயிருங்கள். ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை. யோவான் 10:28. நீங்களும் ஆண்டவருடைய கரத்தில் அடங்கியிருக்க முயற்சி எடுங்கள். அதற்காக நித்தமும் அவரை தேடுங்கள். அவரோடு நெருங்கி ஜீவியுங்கள். இது மிகுந்த அவசியம். பிசாசை கண்டு நீங்கள் பயப்படாமல் இருக்கவேண்டும் என்றால் ஆண்டவர் பக்கத்திலேயே நீங்கள் இருக்க வேண்டும்.

ஒரு போர் வருகின்றபொழுது உயர் அதிகாரிகளுக்குதான் அதிக பாதுகாப்பு தரப்படும். சாதாரண மக்களுக்கு பாதுகாப்பு இருந்தாலும் போரில் அதிகம் பாதிக்கப்பட்டு இறப்பவர்கள் மக்கள் தான். அதே நேரத்தில் உயர் அதிகாரிகளும், அவர்களோடு

இருப்பவர்களும் பாதுகாப்பாய் இருப்பார்கள். அதிபருக்கு கிடைக்கிற பாதுகாப்பு இவர்களுக்கும் கிடைக்கும். அதேப்போலத்தான் ஆண்டவரை தெரிந்துக்கொண்டு, அவரோடுகூட நெருக்கமான உறவு, ஜீவியம் இல்லையென்றால் பிசாசு உங்களை அடித்துக்கொண்டு போய்விடுவான். வஞ்சித்துக் கொண்டுப்போய் விடுவான். மீண்டும் மீண்டும் தேவன் நமக்கு எச்சரிப்பது, உலகத்தின் காரியங்கள், உலகத்தின் ஆசீர்வாதத்தை தேடி தேடி ஓடி ஓடி அலைய வேண்டாம். அது தானே வரும். ஆண்டவர் பார்த்துக்கொள்வார். உங்களுடைய தேவை ஒன்றே ஒன்றுதான் ஆண்டவர் மட்டுமே. ஆண்டவரோடு நெருங்கி ஜீவிக்கிற அனுபவம் உங்களுக்கு வேண்டும். அத்தகைய அனுபவத்திற்குள் நீங்கள் இருக்கும் பொழுது பிசாசு உங்களை தொட்டாலும் ஆண்டவர் உங்களுக்காக வேண்டிக்கொள்வார். உங்களை கைவிடமாட்டார். பின்னும் கர்த்தர்: சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிற தற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன், லூக்கா 22:31-32-ல் இயேசு பேதுருவுக்காக வேண்டிக்கொள்கிறார். பேதுரு இயேசுவை மிகவும் நேசித்தவன். மரித்தாலும் நான் உம்மோடு வருவேன் என சொன்னவன். அந்த அளவிற்கு ஆண்டவரோடு நெருங்கி இருந்தான். பிசாசின் முதல் இலக்கு, டார்கெட் ஆண்டவரோடு நெருக்கமாக உள்ளவர்கள் தான். பிசாசு முதலில் பேதுருவுக்கு பயத்தை கொண்டு வந்தான். என்னையும் சிலுவையில் அறைந்து விடுவார்களோ, நான் மரித்துவிடுவேனோ என்ற கலக்கம் வந்தது. அதனால் இவனை அறியேன் என இயேசுவை மறுதலித்து விட்டான். இன்றைக்கு நிறையபேர் ஆண்டவருடைய பிள்ளை மாதிரி நடித்துக் கொண்டிருக்கிறார்கள். கர்த்தரே தேவன் என்று சொல்லாமல், ஆண்டவருடைய காரியங்களில் வைராக்கியம் பாராட்டாமல், ஏனோ தானோ என்ற ஒரு வாழ்க்கையை வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்கும் ஒரு சிலர் தங்கள் வேலை மற்றும் உலக காரியங்களுக்காக கிறிஸ்துவை மறுதலித்து வாழ்ந்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வேலைக்காக இயேசுவை அறியேன் என எழுதி தரும்பொழுது அதை ஆண்டவர் பார்த்துக் கொண்டிருக்கிறார். இதுதான் ஆண்டவரோடு நெருக்கமாய் இருக்கிறவர்களுக்கும், ஆண்டவரை விட்டு தூரமாய் இருக்கிறவர்களுக்கும் உள்ள வித்தியாசம். உங்களுடைய வேலை, படிப்பு, அந்தஸ்து என அனைத்தும் ஆண்டவரிடமிருந்துதான் வருகிறது என்பதை மறந்துவிடாதீர்கள். பார்ப்பதற்கு எல்லாரும் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள்தான். தெரிந்துக் கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சித்து, அவர்கள் எப்படியாவது கிறிஸ்துவை மறுதலிக்கவேண்டும் என பிசாசு சுற்றித்திரிகிறான்.

யோவான் சுவிசேஷத்தில் உள்ள அருமையான ஒரு அதிகாரம் 17 ஆகும். நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன், உலகத்துக்காக வேண்டிக்கொள்ளாமல், நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன், அவர்கள் உம்முடையவர்களாயிருக்கிறார்களே. நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறது மல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுகிறேன். (யோவான் 17:5,19,20) இத்தகைய அருமையான தேவனுடைய கரத்தின் நிழலில் நாம் இருக்கும்பொழுது எந்த திருடனும் நம்மை அழிக்க முடியாது. திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன். யோவான் 10:10

தேவனுடைய பலத்த கரத்திற்குள் நாம் அடங்கி இருக்கும்பொழுது எந்த தீங்கும் நெருங்காது. காய்ந்து போன வறண்ட பூமியில் எந்த செழிப்பும் காணப்படாது. மரம் செடி கொடி காணமுடியாது. ஆனாலும் அந்த கன்மலைக்கு கீழே நிழல் இருக்கும். வெயிலுக்கு ஒதுங்கும் நிழல். அவருடைய கரங்களில் நாம் இருக்கும்பொழுது எந்த தீங்கும் நேரிடாது. குறிப்பாக பிசாசும் அவன் சேனையும் நம்மை தொடவே முடியாது. அவருடைய கரத்தின் நிழலுக்குள் நாம் அடங்கி இருக்க கற்றுக்கொள்ள வேண்டும். கொடூரமானவர்களின் சீறல் மதிலை மோதியடிக்கிற பெரு வெள்ளத்தைப்போல் இருக்கையில், நீர் ஏழைக்குப் பெலனும், நெருக்கப்படுகிற

எளியவனுக்குத் திடனும், பெருவெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலமும், வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமானீர். ஏசா.25:4. அவர் காற்றுக்கு ஒதுக்காகவும், பெருவெள்ளத்துக்குப் புகலிடமாகவும், வறண்ட நிலத்துக்கு நீர்க்கால்களாகவும், விடாய்த்த பூமிக்குப் பெருங்கன்மலையின் நிழலாகவும் இருப்பார். ஏசாயா 32:2.

## 2. மனிதர்களிடமிருந்து நம்மை பாதுகாக்கும் கரம்

அடுத்ததாக பிசாசு மனிதர்கள் மூலமாக நம்மை துன்புறுத்துவான். மனிதர்கள் பிசாசின் ஏஜென்ட் ஆக செயல்படுவார்கள். நாங்கள் ஊழியத்தின் முக்கியமான காரியங்களில் ஈடுபடும் பொழுது ஒரு சில மனிதர்கள் மூலமாக பிசாசு சில தொந்தரவுகளை கொண்டு வருவான்.

தாவீது சொல்வதுபோல காரணமில்லாத சத்துருக்கள் உங்களை நெருங்கி வரும்பொழுது கலங்கவேண்டாம். (சங்.7:4) நீங்கள் சாதாரணமாக செயல்படும்பொழுது உங்களுக்கு தெரியாத நபர்களின் மூலமாகக்கூட சில தொந்தரவுகளைக் கொண்டு வந்து பிசாசு உங்களை துன்புறுத்த நினைப்பான். ஒரு காலத்தில் தெருவில் உள்ளவர்கள் எல்லாம் சகஜமாக பழகி, சகோதர சகோதரியாக பழகினார்கள். ஆனால் தற்பொழுது வீட்டிற்குள் உறவினர்களையே விடுவது பெரிய பிரச்சனையாக மாறி வருகிறது. இவ்வாறு மறைவாக வருகிற சத்துருக்களும் உண்டு. (சங்.11:2)

ஆனால் என் கரத்தின் நிழலுக்குள் நீங்கள் இருக்கும்பொழுது நான் உங்களை பாதுகாப்பேன் என ஆண்டவர் சொல்கிறார். சவுல் தாவீதை கொல்ல வகைதேடி அலைந்தான். (2சாமு. 8:14) தாவீது போன இடத்தில் எல்லாம் கர்த்தர் அவனை காப்பாற்றினார். ஆண்டவர் காப்பாற்றும்பொழுது அவருடைய கரத்தின் நிழலுக்குள் இருக்கும்பொழுது நீங்கள் எங்கு போனாலும் பாதுகாப்பு உண்டு. உங்களுக்கு சத்துருவாக யார் எழும்பினாலும் கலங்கவேண்டாம், ஆண்டவரிடமிருந்து விசேஷித்த பாதுகாப்பு வரும்.

ராஜாவுக்கு அடுத்த நிலையில் உள்ள ஆமான் மூலம் யூதர்களுக்கு ஆபத்து வந்தபொழுது, எஸ்தர் ராஜாத்தி முதலில் கர்த்தரிடம் சென்றாள். பிறகுதான் அவள் ராஜாவிடம் சென்றாள். கர்த்தர் காரியத்தை மாறுதலாக முடியப்பண்ணினார். எஸ்றாவும், நெகேமியாவும் ஆண்டவருடைய ஆலயத்தை திரும்ப கட்ட நினைத்தார்கள். நெகேமியா 6-ம் அதிகாரத்தில் நெகேமியா எருசலேமின் மதிலை கட்டும்பொழுது தொபியாவும், சன்பல்லாத்தும் அவனுக்கு விரோதமாக திட்டம் தீட்டி அவனை கொல்லப்பார்த்தார்கள். ஆனால் கர்த்தர் நெகேமியாவை பாதுகாத்தார்.

எஸ்றா பாபிலோனிய ராஜாவிடமிருந்து திரும்பி எருசலேமுக்கு வரும்பொழுது தேவாலயத்தை கட்ட ஏராளமான பொருட்கள் தேவைப்பட்டது. நான் மனிதரிடம் உதவி கேட்பது எனக்கு வெட்கமாயிருக் கிறது என்றும் எஸ்றா கூறினான். எங்களுக்குத் துணைசெய்யும்படிக்கு, நான் ராஜாவினிடத்தில் சேவகரையும் குதிரைவீரரையும் கேட்க வெட்கப் பட்டிருந்தேன், எங்கள் தேவனுடைய கரம் தம்மைத் தேடுகிறவர்கள் எல்லார்மேலும் அவர்களுக்கு நன்மையாக இருக்கிறதென்றும், எஸ்றா 8:22 அநேக இடங்களில் கர்த்தருடைய கரம் எங்களுக்கு பாதுகாப்பாக இருந்தது என சொல்கிறான். இதே தேவன் தான் இன்றும் என்றும் உங்களை பாதுகாப்பார். எங்கள் தேவனுடைய கரம் எங்கள் மேலிருந்து, வழியிலே சத்துருவின் கைக்கும், பதிவிருக்கிறவர்களின் கைக்கும் எங்களைத் தப்புவித்தது. எஸ்றா 8:31

...விக்கினங்கள் கடந்து போகுமட்டும் உமது செட்டைகளின் நிழலிலே வந்து அடைவேன். சங்.57:1-ல் தாவீது, விக்கினங்கள் கடந்து போகுமட்டும் உம் செட்டைகளின் நிழலில் வந்து அடைக்கலம் புகுவேன் என்றான். ஆம் எந்த ஆபத்தைக் குறித்தும் பயந்து வாழாதீர்கள்.

உங்களுடைய வேலை ஆண்டவருடைய ஒளிக்கு அநேகரை அழைத்து வருவதுதான். பிசாசுக்கும், மனிதர்களுக்கும் பயந்து பயந்து வாழ வேண்டாம். நம் கர்த்தர் நம்மை ஒளி கொடுக்கும் மின்மினி பூச்சிகளைப் போல வைத்திருக்கிறார். நம்முடைய சத்துருக்களும் நம்மை பார்த்து ஆண்டவரை அறிந்துக்கொள்ளதக்கதாக நாம் ஆண்டவருடைய நிழலில் இருக்க வேண்டும். இந்த பாதுகாப்பு நமக்கு வேண்டும் என்றால் சங்.91:1 உன்னதமானவரின் நிழலில் இருக்கிறவர்களாக அநுதினமும் வாழ வேண்டும். அப்பொழுது நம் சத்துருக்களின் இஷ்டத்திற்கு அவர் நம்மை ஒப்புக்கொடுக்காமல் தம்முடைய கரத்தின் நிழலுக்குள் மூடி மறைத்துக்கொள்வார்.

## 3. நமக்குரிய ஆசீர்வாதங்களை பாதுகாக்கும் கரம்

அவருடைய கரத்தின் நிழலுக்குள் நாம் இருக்கும்பொழுது நம்மை மட்டும் அவர் மூடி பாதுகாப்பது அல்ல. நமக்குள் இருக்கிற சகல ஆசீர்வாதங்களையும் மூடி பாதுகாக்கிறார். இப்பொழுது நமக்கு தெரியாமல் ஏராளமான ஆசீர்வாதங்களை ஸ்டோர் ஹவுஸில் நமக்காக கர்த்தர் சேர்த்து வைத்திருக்கிறார். நமக்கு உள்ள ஆசீர்வாதங்களை, நன்மைகளை அவருடைய கரத்தில் ஒளித்து வைத்து சரியான நேரத்தில் நமக்குக் கொடுக்கிறார். ஆண்டவர் நமக்கு வைத்திருக்கும் நன்மை மிகவும் பெரிதாகவே இருக்கிறது. உமக்குப் பயந்தவர்களுக்கும், மனுபுத்திரருக்கு முன்பாக உம்மை நம்புகிறவர்களுக்கும், நீர் உண்டு பண்ணி வைத்திருக்கிற உம்முடைய நன்மை எவ்வளவு பெரிதாயிருக்கிறது! மனுஷருடைய அகங்காரத்துக்கு அவர்களை உமது சமுகத்தின் மறைவிலே மறைத்து, நாவுகளின் சண்டைக்கு அவர்களை விலக்கி, உமது கூடாரத்திலே ஒளித்து வைத்துக் காப்பாற்றுகிறீர். சங்.31:19-20.

ஆபிரகாம் வாக்குத்தத்தத்தின் புத்திரனை பெற்றுக்கொள்ள 25 வருடங்கள் காத்திருந்தான். யோசேப்புக்கு என வைத்திருந்த ஆசீர்வாதங்களை ஆண்டவர் யாக்கோபிடம் சொல்லவில்லை. சரியான நேரத்தில் அவனை ஆசீர்வதிப்பதற்காக ஒளித்து வைத்திருந்தார். சிங்காசனத்திற்கு போவதற்கு 13 வருடங்கள் யோசேப்பு காத்திருந்தான். மனிதர்களிடம் முன்னமே சொன்னால் அந்த ஆசீர்வாதத்தை குழைத்துபோடவே மனிதன் முயற்சி செய்வான். தாவீது சிங்காசனத்திற்கு செல்வதற்கு முன் 16 வயது முதல் 40 வயது வரை வனாந்தரத்திலும், காட்டிலும் அலைந்து திரிந்தான். ஆண்டவர் அவனை அபிஷேகம் பண்ணி இருந்தும் சிங்காசனத்தில் உட்கார இத்தனை வருடங்கள் ஆனது.

கர்த்தர் மோசேயை வனாந்தரத்தில் தேடி கண்டுபிடித்தார். "நீ தான் இஸ்ரவேலுக்கு இரட்சகன்" என சொல்லி அனுப்பினார். இவற்றையெல்லாம் ஆண்டவர் மனிதனிடம் முன்னமே சொல்லி செயல்படவில்லை. சில நல்ல காரியங்கள் சரியான நேரத்தில் நடக்க வேண்டுமானால் ஆண்டவர் அதை மறைத்து வைத்தே செயல்படுகிறார்.

வெண்கலக் கதவுகளை உடைத்து, இருப்புத் தாழ்ப்பாள்களை முறித்து, அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்களையும், ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களையும் உனக்குக் கொடுப்பேன். ஏசாயா 45:4-ல் மறைவிலே உள்ள ஆசீர்வாதங்களை தருவேன் என ஆண்டவர் சொல்லுகிறார். அவர் சமூகத்தில் மறைக்கப்பட்டுள்ள ஆசீர்வாதங்கள் நமக்கு வேண்டுமானால் நாம் அவருடைய கரத்தின் நிழலுக்குள் இருக்க வேண்டும். நாம் அவற்றை புறக்கணித்து வேறு வழியில் செல்லும்பொழுது அந்த ஆசீர்வாதங்கள் நமக்கு கிடைக்காது.

உங்களுக்கு என உண்டுபண்ணி வைத்திருக்கிற நன்மைகளை, ஆசீர்வாதங்களை அவருடைய கரத்தில், அவர் சமூகத்தில் ஒளித்து வைத்திருக்கிறார். அதை யாரும் தட்டிபறிக்க முடியாது. உங்களுக்கு என வைத்திருக்கிற ஆசீர்வாதம் உங்களுக்குத்தான் தரப்படும். பிசாசு அதை தடைபண்ண முடியாது. இதைதான் யோபு சொல்கிறான். தேவரீர் சகலத்தையும் செய்யவல்லவர், நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன். யோபு 42:2

## 4. அவருடைய கோபாக்கினைக்கு நம்மை தப்புவிக்கும் கரம்

கடைசியாக நாம் அவருடைய கரத்தின் நிழலில் இருக்கும்பொழுது கோபாக்கினைக்கு தப்புகிறோம். கர்த்தர் கோபிக்கும்பொழுது நாம் யாருமே அவர் முன்பு நிற்க முடியாது. இஸ்ரவேல் ஜனங்கள் மேல் ஆண்டவர் கோபமாயிருந்து அழிக்க நினைத்தபொழுது எரேமியா தீர்க்கதரிசியிடம் ஆண்டவர் இந்த இஸ்ரவேல் ஜனங்களுக்காக மோசேயும், சாமுவேலும், என் முகத்திற்கு முன்பாக நின்றாலும் நான் அவர்கள் ஜெபத்தை கேட்கமாட்டேன் என சொல்கிறார் (எரேமியா 15:1). இஸ்ரவேல் ஜனங்கள் மீது அவருடைய கோபாக்கினை அவ்வளவு அதிகமாக இருந்தது. ஆனால் அந்த கோபாக்கினையினின்று தப்புவதற்கு ஒரு இடம் உண்டு. அது தான் அவருடைய கரத்தின் நிழல்.

ஆண்டவர் அழிக்க நினைக்கும்பொழுது அதை எந்த ஒரு மனிதனாலும் தடுக்க முடியாது. இஸ்ரவேல்

ஜனங்கள் அவரால் தெரிந்துக் கொள்ளப்பட்டவர்கள். அதனால் மோசே இஸ்ரவேல் ஜனங்களுக்காக போராடி ஜெபிக்கிறான். ஆண்டவர் அழிக்க நினைக்கும்பொழுது அதை எந்த ஒரு மனிதனாலும் தடுக்க முடியாது. நீ என் முகத்தைக் காணமாட்டாய், ஒரு மனுஷனும் என்னைக் கண்டு உயிரோடிருக்கக் கூடாது என்றார். பின்னும் கர்த்தர்: இதோ, என்னண்டையில் ஒரு இடம் உண்டு, நீ அங்கே கன்மலையில் நில்லு. என் மகிமை கடந்துபோகும் போது, நான் உன்னை அந்தக் கன்மலையின் வெடிப்பிலே வைத்து, நான் கடந்து போகுமட்டும் என் கரத்தினால் உன்னை மூடுவேன், பின்பு, என் கரத்தை எடுப்பேன், அப்பொழுது என் பின்பக்கத்தைக் காண்பாய், என் முகமோ காணப்படாது என்றார். யாத்தி.33:20–23 ஆண்டவர் மோசேயுடன் முகமுகமாய் பேசினார் என வேதத்தில் பார்க்கிறோம். ஆனால் இங்கு என் கரத்தினால் உன்னை மூடுவேன், என் பின்பக்கத்தை நீ காண்பாய் என்று ஆண்டவர் சொல்வதற்குரிய காரணம் என்ன என்பதை யோசித்துப்பாருங்கள். அவருடைய பிரசன்னம் கன்மலையை உருக்குகிற பிரசன்னம். அத்தகைய பிரச்சன்னத்திற்கு முன் மோசே நிற்பது எளிதல்ல. இன்றைய உலகம் தேவனை சாதாரணமாக நினைக்கிறது. காரணம் இந்த உலகத்தின் அறிவு கூர்மை பயங்கரமாக இருக்கிறது. அவருடைய படைப்பு அனைத்தும் அவருடைய கட்டுபாட்டிற்குள் இருக்கும்பொழுது மனிதன் மட்டும் துள்ளுகிறான். ஆண்டவர் நினைத்தால் நம்மை சாம்பலாக்க முடியும்.

அவருடைய கோபத்திலிருந்து தப்பித்துக் கொள்ள, அவருடைய மகிமையான பிரசன்னத்தின் மகிமையிலிருந்து அழிக்கப்படாமல் தப்புவிக்கப்பட அவருடைய கரத்தின் மறைவு மட்டுமே உங்களுக்கு அடைக்கலமாயிருக்கும். அதனால்தான் ஆண்டவர் மோசேயிடம் என்னுடைய கரத்தினால் உன்னை மறைக்கிறேன் என சொல்கிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து புறப்படும்பொழுது கடைசியாக ஒரு வாதையை அனுப்புகிறார். கர்த்தர் எகிப்தியரை அதம்பண்ணு கிறதற்குக் கடந்துவருவார், நிலையின் மேற் சட்டத்திலும் வாசலின் நிலைக்கால்கள் இரண்டிலும் அந்த இரத்தத்தைக் காணும்போது, கர்த்தர் சங்காரக் காரனை உங்கள் வீடுகளில் உங்களை அதம்பண்ணுகிறதற்கு வரவொட்டாமல், வாசற்படியை விலகிக் கடந்துபோவார். யாத்தி 12:23 சங்கார தூதன் கொல்லுகிறவன். இந்த சங்கார தூதனை கண்ட்ரோல் பண்ணுகிறவர் ஆண்டவர். கர்த்தர் கடந்துபோகும் பொழுது வாசல்களில் தடவப்பட்ட ஆட்டுக்குட்டியின் இரத்தத்தைக் கண்டு எந்த தீங்கும் செய்யாமல் சங்கார தூதன் கடந்துபோவான். அந்த இரத்தம் இஸ்ரவேல் ஜனங்களுடைய எல்லா வீட்டு வாசலின் நிலைக் கால்களில் தடவப்பட்டது. அதனால் இஸ்ரவேல் ஜனங்களை கர்த்தர் பாதுகாத்தார்.

ஆட்டுக்குட்டியின் இரத்தம் இஸ்ரவேல் ஜனங்களின் வாசல் நிலைகளில் தடவப்பட்டது. இதே காரியத்தை நீங்கள் வாசிக்கும்பொழுது அந்த இரத்தத்தை நாம் தடவ முடியுமா? இன்று அந்த இரத்தத்திற்கு பதிலாக இயேசுவின் பரிசுத்த இரத்தம் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. சங்கார தூதன் பூமியை அழிக்க வரும்பொழுது இயேசுவின் இரத்தத்தின் மறைவுக்குள் நாம் இருக்க வேண்டும். இப்பொழுது இயேசுவின் சிலுவை இரத்தம் தான் நம்மை மூடிக்கொள்கிறது. அந்த நேரத்தில் சங்கார தூதன் கடந்து போனாலும் நம்மிடத்தில் அழிவு காணப்படாது. குமாரன் கோபங்கொள்ளாமலும், நீங்கள் வழியிலே அழியாமலும் இருக்கும்படிக்கு, அவரை முத்தஞ் செய்யுங்கள், கொஞ்சக்காலத்திலே அவருடைய கோபம் பற்றியெரியும், அவரை அண்டிக்கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள். சங்.2:12–ன்படி நாம் அவரை அண்டிக்கொள்ள வேண்டும். ஆட்டுக்குட்டியின் இரத்தத்திற்கு பதில் சிலுவையின் இரத்தம் தரப்பட்டிருக்கிறது. நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக் கடவோம். எபிரெயர் 4:16

கிருபாசனம் என்பதன் அர்த்தம் என்ன? கோபத்தின் அடையாளமாக, நியாயத்தீர்ப்பின் அடையாளமாக, நீதியின் அடையாளமாக இருக்கிற சிங்காசனம் சிலுவையின் மூலம் கிருபையின் அடையாளமாக இருக்கிறது. இயேசுகிறிஸ்து கோபாக்கினைக்கு தம்மையே ஒப்புக்கொடுத்தார்.

அந்த சிலுவையின் இரத்தத்திற்குள் நீங்கள் வரும் பொழுது தேவகோபாக்கினை உங்களைவிட்டு நீங்குகிறது.

நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. ஏசாயா 53:5. நம்மை அழிப்பதற்கு பதிலாக அவர் தம்மையே ஒப்புக் கொடுத்தார். அதனால் இயேசுவின் சிலுவை நிழலுக்குள் நீங்கள் வரும்பொழுது அவருடைய கரத்தின் நிழலுக்குள் நீங்கள் வந்துவிடுகிறீர்கள். பயங்கரமான பிரச்சனைகள் வந்தாலும், யுத்தங்கள் வந்தாலும், நீங்கள் பயப்பட வேண்டாம். முடிவு உடனே வராது. (வெளி.9:1–12) அப்பொல்லியோன் சேனையை கர்த்தர் இந்த உலகத்தை ஒப்புக்கொடுக்கும் காலத்திற்குள் நாம் வந்திருக்கிறோம்.அத்தகைய ஆபத்தான காலத்தில் இயேசுவினுடைய சிலுவை இரத்தத்துக்குள் நாம் வந்துவிட்டால் பொல்லாத அப்பொலில்யோன் மற்றும் சத்துருவோ, பாதாளமோ எதுவாக இருந்தாலும் அவை நம்மை ஒன்றும் செய்யமுடியாது.

உலகம் அக்கினிக்கு இரையாக வைக்கப் பட்டிருக்கிறது. உலகம் அழிவுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால் உலகத்தின் பாவங்கள் ஒவ்வொரு நாளும் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. தேவன் இல்லையென மதிகேடன் தன் உள்ளத்திற்குள் சொல்லிக்கொள்கிறான். அப்படியாக மதிகேட்டுக்கு என ஒப்புக்கொடுக்கப்பட்ட ஜனங்கள் இருக்கிறார்கள்.

இருப்பினும் உங்களுக்கு என ஒரு ஆசீர்வாதம் உண்டு. அதுதான் அவருடைய கரத்தின் நிழல், அவருடைய கரத்தின் மறைவு. அதற்குள் நீங்கள் இருக்கும்பொழுது சத்துருவுக்கு உங்களை விலக்கி பாதுகாப்பார், பொல்லாத பிசாசுக்கு விலக்கி பாதுகாப்பார், அவருடைய கோபாக்கினைக்கு உங்களை தப்புவிப்பார். உங்களுக்கு என ஒளித்து வைக்கப்பட்டுள்ள ஆசீர்வாதங்களை பாதுகாப்பார்.

அந்த சிலுவையின் மறைவிற்குள் இப்போதே வந்துவிடுங்கள். அந்த சிலுவையின் மறைவுதான் அவருடைய கரத்தின் மறைவு, அதற்குள் வந்துவிட்டால் கர்த்தர் உங்களையும், உங்கள் குடும்பத்தையும் அனைத்து தீங்கிற்கும் விலக்கி பாதுகாப்பார். இயேசுவின் சிலுவை மறைவில் தான் இரட்சிப்பு இருக்கிறது. அந்த சிலுவையின் மறைவில்தான் சுகம் இருக்கிறது. விடுதலை இருக்கிறது. நம்பிக்கை இருக்கிறது. எல்லா ஆசீர்வாதமும் உங்களுக்கு கிடைக்கிறது.

TAMIL WHATSAPP NO.
**+91 95975 55066**

## ஜெப வீரர்களான உங்களுக்கு ஒரு மகிழ்ச்சியின் செய்தி!

ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப்பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள் என்றார் – லூக்கா 21: 36

மெய்யாய் தேவன் எனக்குச் செவி கொடுத்தார், என் ஜெபத்தின் சத்தத்தைக் கேட்டார். என் ஜெபத்தைத் தள்ளாமலும், தமது கிருபையை என்னை விட்டு விலக்காமலும் இருந்த தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக சங்கீதம் 66: 19,20 (சங்கீதம் 86:5,6; 65: 2)

பங்காளர்களான உங்களில் அநேகர் தனித்து ஜெபிக்க முடியவில்லை என வருந்துகிறீர்கள். உங்களுக்கு நல்ல வாய்ப்பு. ஆண்டவரோடு தனித்திருந்து ஜெபம் செய்யவேண்டும் என்று நீங்கள் நினைத்தால் திருச்சி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்திற்கு நேரில் வந்து ஜெபித்து செல்லலாம். எங்களுடைய ஜெப அறைகள் உங்களுக்காக ஆயத்தமாக இருக்கிறது. நீங்கள் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை நமது ஜெப ஸ்தலத்திற்கு வந்து தனித்து ஜெபிக்கலாம்.

அத்துடன் நமது அன்பரின் ஊழியத்தின் எல்லா வித ஊழியங்களுக்காகவும் ஜெபிக்கலாம். பணி ஓய்வு பெற்றவர்களும் ஊழியத்திற்கு வந்து ஜெபம் செய்து தாங்கலாம். நீங்கள் எவ்வளவு நேரம் தங்கி ஜெபிக்க வேண்டுமோ அப்படியே ஒழுங்கு செய்து தரப்படும். எத்தனை மணிநேரம் நீங்கள் ஜெபிக்க விரும்புகிறீர்களோ எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். **தொடர்புக்கு: 94889 32937**

# உபவாச ஜெபங்கள்

***பரிசுத்த உபவாசநாளை நியமியுங்கள்; விசேஷித்த ஆசரிப்பைக் கூறுங்கள்; மூப்பரையும் தேசத்தின் எல்லாக் குடிகளையும், உங்கள் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்திலே கூடி வரச்செய்து கர்த்தரை நோக்கிக் கூப்பிடுங்கள்.***

***யோவேல் 1:14 (யோவேல் 2: 15–19,21)***

2023 டிசம்பர் 28–ம் தேதி அன்று அதிகாலையில் சகோதரர் அவர்கள் மரணப்படுக்கையை கடந்து சென்றார்கள். அப்பொழுது கர்த்தருடைய ஆவியானவர் உபவாச ஜெபங்களை அதிகரிக்கும்படி தெளிவாக கூறினார். அதற்கு கீழ்ப்படிந்து கடந்த மார்ச் 2 மற்றும் 23–ம் தேதி திருச்சியிலும், மார்ச் 16 நாகர்கோவிலிலும் விசேஷித்த உபவாச நாளை வைத்திருந்தோம். அநேகர் இதில் பங்குபெற்று தங்களுடைய தீராத பிரச்சனைகளுக்காகவும், பல நாட்கள் அவர்கள் அனுபவித்த சிறையிருப்பு நீங்கி பரிபூரண விடுதலை பெறவும், பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை நிறைவாக பெறவும் ஜெபித்தார்கள்.

சகோதரர் மற்றும் சகோதரி இருவரும் இக்கூட்டங்களை நடத்தினார்கள். தொடர்ந்து இக்கூட்டங்கள் வரவிருக்கும் நாட்களில் அவ்வப்பொழுது நடைபெறும். நீங்கள் அனைவரும் தவறாமல் இதில் பங்குபெறுமாறு கேட்டுக்கொள்கிறோம். பல தீர்க்கமுடியாத பிரச்சனைகளினால் கஷ்டப்படுகிற குழந்தைகள், பிசாசின் கட்டுகளில் இருக்கிற உங்கள் பிள்ளைகள், உங்கள் திருமண வாழ்க்கையிலும், தனிப்பட்ட வாழ்க்கையிலும், கல்வியிலும், தொழிலிலும் ஏற்படுகிற தீராதபிரச்சனைகள், சாபங்கள் இவற்றிலிருந்து பரிபூரணமாக விடுதலை பெற்று தேவனுடைய அளவற்ற ஆசீர்வாதங்களை பெற இக்கூட்டங்கள் உதவியாக இருக்கும்.

திருச்சி அன்பரின் ஊழியத்தில் நடைபெறும் அனைத்து கூட்டங்களுக்கும் தேவ மக்களாகிய நீங்கள் அனைவரும் உங்கள் நண்பர்கள், உறவினர்கள் மற்றும் குடும்பத்தினர்களை தவறாமல் அழைத்து வாருங்கள். இதுவும் தேவனுக்கு நீங்கள் செய்யும் ஊழியமாகும். நம் கூட்டங்களின் மூலம் கர்த்தர் பெரிய காரியங்களை செய்துள்ளார். அதற்காக தேவனை துதிக்கிறோம்.

**திருச்சியில்**

## அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்

**ஏப்ரல் 27 சனிக் கிழமை**

**இடம் : அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம்**
**10வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி – 18.**

**நேரம் : காலை 9.30 மணி முதல் 2.00 மணி வரை**

**தேவ செய்தி : Dr.ஆனந்த ஸ்திரா & குடும்பத்தினர்**

**(கூட்ட முடிவில் ஜெபம் ஏறெடுக்கப்படும்)**

**தொடர்புக்கு : செல் 94888 45627, 0431 - 2741922**

தேவனுக்கே மகிமை!

# அன்பரின் ஊழிய ஸ்தாபகர் Dr.ஆனந்த ஸ்திரா அவர்களின் பிறந்தநாள் விழா அறிக்கை!

சகோதரரெல்லாரும் உங்களை வாழ்த்துகிறார்கள். ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடே வாழ்த்துங்கள். 1 கொரி. 16: 20

கிறிஸ்துவுக்குள் எனக்கன்பான சகோதர, சகோதரிகளே!

உங்கள் அனைவருக்கும் இயேசுகிறிஸ்துவின் மகிமையான நாமத்தில் எங்கள் அன்பின் வாழ்த்துக்கள்! அன்பரின் ஊழிய ஸ்தாபகர் Dr.ஆனந்த ஸ்திரா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மார்ச் 9–ம் தேதி அன்று திருச்சிக்கு வருகை தந்து, கிறிஸ்துவுக்குள் ஒரு குடும்பமாக இணைந்து, பிறந்தநாள் விழாவை சிறப்பித்த பங்காளர்கள் அனைவருக்கும் எங்களுடைய நன்றியை அன்போடு தெரிவிக்கிறோம்.

உங்களுக்கு அத்தியாவசியமான பல வேலைகள் மற்றும் குடும்ப காரியங்கள் இருந்திருக்கலாம். அவைகளை எல்லாம் தவிர்த்து விட்டு, அந்நாளில் நீங்கள் நேரில் வந்தது ரொம்ப சந்தோஷம். விசேஷமாக சகோதரனுடைய நல்ல சுகத்திற்காகவும், நீடிய ஆயுளுக்காகவும் ஊழியத்திற்காகவும் நீங்கள் பாரத்துடன் ஜெபித்தீர்கள். அதற்காகவும் உங்களுக்கு நன்றி கூறுகிறோம்.

பிறந்தநாள் விழாவானது கர்த்தரை ஆராதித்து ஜெபத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. நமது அன்பரின் ஊழிய பணியாளர்கள் மற்றும் S.J.S.T. மருத்துவமனை பணியாளர்கள் வழங்கிய கலை நிகழ்ச்சிகள் பங்காளர்கள் அனைவரையும் மகிழ்ச்சிக்குள்ளாக்கியது. அதை தொடர்ந்து அன்பு சகோதரனுடைய உருக்கமான தேவசெய்தி, பாடல்கள், ஜெபம் அனைவர் உள்ளத்தையும் ஆழமாக தொட்டு அசைத்தது. கூட்ட முடிவில் அனைவருக்கும் சிறப்பு விருந்து அளிக்கப்பட்டது.

தேவனின் மாறாத கிருபையினாலும், உங்களது ஜெபத்தாலும், கர்த்தர் ஏவினபடி நம் ஊழியத்திற்கு நீங்கள் செய்து வருகிற உதவிகளாலும் நம் ஊழியம் வளர்ந்து பெருகிற்று. இதற்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறோம்!

கிறிஸ்துவுடனே அழியாத அன்பு கொண்டிருக்கிற உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறோம். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் அழியாத அன்புடனே அன்பு கூருகிற யாவரோடும் கிருபை உண்டாயிருப்பதாக. ஆமென். எபேசியர் 6:24. உங்கள் ஜெப விண்ணப்பங்களை எங்களுக்கு அனுப்பி வையுங்கள். உங்களுக்காக தவறாமல் ஜெபிப்போம். கர்த்தர் பெரிய காரியங்களை செய்வார்.

**உங்கள் ஜெபமே இந்த மாபெரும் ஊழியத்தின் வெற்றியின் இரகசியம்!**

# பிறந்தநாள் விழா புகைப்படத்தொகுப்பு



















# துதி அறிக்கை



## நோய் நீங்கியது!



நான் இரண்டு வருடமாக படர் தாமரை வியாதியினால் அதிகம் கஷ்டப்பட்டேன். அன்பரின் ஊழியத்திற்கு கடிதம் எழுதி என்னுடைய வியாதிக்காக ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டேன். **Dr.ஆனந்த ஸ்திரா** மற்றும் அவர்கள் குடும்பத்தினரின் ஜெபத்தைக் கேட்டு கர்த்தர் எனக்கு பரிபூரண சுகத்தை கொடுத்துவிட்டார். அற்புத சுகம் கொடுத்த இயேசுவுக்கு ஸ்தோத்திரம். அன்பரின் ஊழியத்திற்கு என்னுடைய நன்றியை தெரிவிக்கிறேன். **– திரு. ராஜன்,**

## வலிப்பு நோயிலிருந்து விடுதலை!

என்னுடைய இரண்டு குழந்தைகளுக்கு இரவு நேரத்தில் தூங்கும்பொழுது வலிப்பு வியாதி வந்து விடும். நாகர்கோவிலில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்தப்பொழுது **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் என்னுடைய குழந்தைகளுக்காக ஜெபிக்கும்படி சொன்னேன். சகோதரரும் பாரத்துடன் ஜெபித்து அனுப்பினார்கள். அன்றிலிருந்து என் குழந்தைகளுக்கு வலிப்பு நோய் வரவேயில்லை. குழந்தைகள் பரிபூரண சுகத்துடன் இருக்கிறார்கள். அத்துடன் என் குடும்பத்தின் பல்வேறு பிரச்சனையிலிருந்து விடுதலையும் கிடைத்துள்ளது. இயேசுகிறிஸ்துவின் நாமத்திற்கு மகிமை உண்டாவதாக!

**– திருமதி. கௌரிசங்கரி, நாகர்கோவில்.**

## மகனை இரட்சித்தார்!

என் மகன் நன்றாக படிக்காமல் வழி தவறி சென்றான். நாகர்கோவிலில் நடைபெறுகிற கூட்டத்திற்கு தொடர்ந்து வந்திருந்து கண்ணீரோடு ஜெபித்து செல்வேன். ஜெப விண்ணப்பத்திலும் என் மகனுக்காக ஜெபிக்கும்படி எழுதிக்கொடுத்தேன். அன்பரின் ஊழியத்திலிருந்து பதில் கடிதம் வந்தது. “கர்த்தர் உங்கள் மகனை சந்திப்பார்” என ஐயா எழுதியிருந்தார்கள். அதன்பின் மகனுடைய செயலில் நல்ல மாற்றம் தெரிந்தது. கர்த்தர் தாமே எங்கள் மகனை அவருக்கு உகந்த பிள்ளையாக மாற்றினார். மகனுக்கு நல்ல ஞானத்தைக் கொடுத்து பி.இ. முடிக்கவும் கர்த்தர் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை! அன்பரின் ஊழியத்திற்கும் என்னுடைய நன்றியை தெரிவிக்கிறேன்.

**– திருமதி. மேரிலதா, நாகர்கோவில்.**

## பதவி உயர்வு கிடைத்தது!



என் கணவர் மாநகராட்சியில் வேலை பார்த்து வருகிறார். உடல் பருமனாக இருப்பதால் கடினமான வேலைகளை செய்வதில் அதிக சிரமம் ஏற்பட்டது. அதனால் பெலவீனம் அடைந்தார். கடந்த அக்டோபர் மாதம் திருச்சி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்திற்கு வந்திருந்து என் கணவருக்கு பதவி உயர்வு கிடைக்கவேண்டும் என ஜெபித்து சென்றேன். கர்த்தர் அற்புதமாக இரங்கினார். ஜனவரி 15-தேதிக்குள் அவருக்கு பதவி உயர்வும் கிடைத்தது. எங்கள் கண்ணீரை துடைத்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

**– திருமதி. பானுமதி, திருச்சி.**

## குழந்தை நல்ல முறையில் பிறந்தது



எங்கள் மருமகள் கருவுற்று இருந்தப்பொழுது 3-வது மாதம் மற்றும் 8-வது மாதம் சில பிரச்சனைகள் ஏற்பட்டு அதிக கஷ்டப்பட்டாள். அந்த நேரத்தில் நாகர்கோவிலில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்து, தனிஜெப நேரத்தில் **Mrs.மார்கிரேட் ஸ்திரா** அவர்களிடம் என் மருமகளுக்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன். சகோதரி பாரத்துடன் ஜெபித்துவிட்டு, “கர்த்தர் உங்கள் மருமகளுக்கு எந்த பிரச்சனையும் இல்லாமல் நல்ல முறையில் குழந்தையை பிறக்கச் செய்வார்” என சொல்லி அனுப்பினார்கள். அவர்கள் கூறியபடியே கர்த்தர் அழகான குழந்தையை தந்து ஆசீர்வதித்திருக்கிறார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். பாரத்துடன் ஜெபித்த சகோதரி அவர்களுக்கும் எங்கள் நன்றியை கூறிக்கொள்கிறோம்.

**– திருமதி. விஜிலா, நாகர்கோவில்.**

## இரண்டு கட்டிகள் மறைந்தது!

நாகர்கோவிலில் நடைபெறுகிற கூட்டத்திற்கு நான் தொடர்ந்து வந்துக் கொண்டிருக்கிறேன். என் வாழ்வில் கர்த்தர் செய்த நன்மைகள் ஏராளம் ஏராளம், நன்றி சொல்ல நாவு போதாது.

என் கழுத்தில் இரண்டு கட்டி இருந்தது. அதற்காக ஜெபிக்கும்படி ஜெப விண்ணப்பத்தில் எழுதிக் கொடுத்தேன். தனி ஜெபத்தில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் கட்டியை காண்பித்து

ஜெபித்து வந்தேன். தற்பொழுது அந்த கட்டியை கர்த்தர் முற்றிலும் மாற்றிப்போட்டார். தேவனுக்கே மகிமை! ஜெபித்த ஐயாவிற்கும், குடும்பத்தினருக்கும் என்னுடைய நன்றியை கூறிக் கொள்கிறேன்.

**– திருமதி. அற்புதம், கோணங்காடு.**

## அற்புத சுகம் கிடைத்தது!



என்னுடைய தாடையில் ஆட்டம் இருந்தது. திருநெல்வேலியில் நடைபெற்ற கூட்டத்திற்கு நான் தொடர்ந்து வந்துக்கொண்டு இருக்கிறேன். கூட்டமுடிவில் **Mrs.மார்கிரேட் ஸ்திரா** அவர்களிடம் என்னுடைய பிரச்சனைக்காக ஜெபிக்கும்படி சொன்னேன். சகோதரி எனக்காக ஊக்கமாய் ஜெபித்தார்கள். அன்றிலிருந்து கர்த்தர் எனக்கு பெரிய விடுதலையைத் தந்தார். இப்பொழுது அந்த ஆட்டம் இல்லை.

என் கணவருக்கு சரீரத்தில் பல பிரச்சனைகள் இருந்தது. சுகர், தைராய்டு, நெஞ்சுவலி, மூட்டுவலி இருந்தது. கர்த்தர் தாமே அதிலிருந்தும் அற்புதமாய் அவருக்கு விடுதலை கொடுத்துள்ளார். கர்த்தருக்கு கோடாகோடி ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கிறேன்.

**– திருமதி. மரியம்மாள், திருநெல்வேலி.**

## ஆப்ரேஷன் இன்றி சுகம் பெற்றேன்!



நான் நீண்ட நாட்களாக சைனஸ் பிரச்சனையினால் அதிகம் கஷ்டப்பட்டேன். என்னை பரிசோதித்த மருத்துவர் ஆப்ரேஷன் செய்யவேண்டும் என கூறிவிட்டார்கள். அதனால் மிகுந்த கலக்கத்துடன் திருச்சியில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்து **Dr.ஆனந்த ஸ்திரா, Mrs.மார்கிரேட் ஸ்திரா** இருவரையும் சந்தித்து எனக்காக ஜெபிக்கும்படி சொன்னேன். இருவரும் பாரத்துடன் ஜெபித்துவிட்டு ஆப்ரேஷன் இல்லாமல் ஆண்டவர் சுகம் தருவார் என சொல்லி அனுப்பினார்கள். ஜெபத்திற்கு பின் எனக்கு சைனஸ் பிரச்சனை இல்லை. அற்புத சுகத்தை தந்த கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன்.

**– திருமதி. ஷீலா, துறையூர்.**

**MALAYALAM WHATSAPP NO.**
**+ 91 94889 32937**

# 2024 ஏப்ரல் மாதத்திற்குரிய தினசரி வாக்குத்தத்த வசனங்கள்

**01** உம்முடைய செட்டைகளின் நிழலிலே என்னைக் காப்பாற்றும். (சங். 17:9)

**02** அவர் தமது பரிசுத்தவான்களின் பாதங்களைக் காப்பார். (1சாமு. 2:9)

**03** கர்த்தர் உன் நம்பிக்கையாயிருந்து, உன் கால் சிக்கிக் கொள்ளாதபடி காப்பார். (நீதி. 3:26)

**04** உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார். (சங். 91:11)

**05** அவர் உன் ஆத்துமாவைக் காப்பார். (சங். 121:7)

**06** என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும் ; அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும். (மல்கியா 4:2)

**07** பறந்து காக்கிறபட்சிகளைப்போல, சேனைகளின் கர்த்தர் எருசலேமின்மேல் ஆதரவாக இருப்பார்; அவர் அதைக் காத்துத் தப்பப்பண்ணுவார். (ஏசா. 31:5)

**08** இந்நாளில் இருக்கிறதுபோல, நம்மை அவர் உயிரோடே காப்பதற்கும், எந்நாளும் நன்றாயிருக்கிறதற்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து இந்த எல்லாக் கட்டளைகளின்படியேயும் செய்யக் கர்த்தர் நமக்குக் கட்டளையிட்டார். (உபா. 6:24)

**09** கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக்கடவர். (எண் 6:24)

**10** உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான். (சங். 91:1)

**11** வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவரும்... (யூதா 1:24)

**12** இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக. (ரூத் 2:12)

**13** ... உமது செட்டைகளின் மறைவிலே வந்து அடைவேன். (சங். 61:4)

**14** இதோ, இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை தூங்குகிறதுமில்லை (சங். 121:4)

**15** ... விக்கினங்கள் கடந்துபோகுமட்டும் உமது செட்டைகளின் நிழலிலே வந்து அடைவேன். (சங். 57:1)

16 ... தமது கரத்தின் நிழலினால் என்னை மறைத்து, என்னைத் துலக்கமான அம்பாக்கி, என்னைத் தமது அம்பறாத் தூணியிலே மூடி வைத்தார். (ஏசா. 49:2)

17 கர்த்தர் உன் போக்கையும் உன் வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றைக்குங் காப்பார். (சங். 121:8)

18 ... நாம் நடந்த எல்லா வழியிலும், நாம் கடந்துவந்த எல்லா ஜனங்களுக்குள்ளும் நம்மைக் காப்பாற்றினவர் நம்முடைய தேவனாகிய கர்த்தர் தாமே. (யோசுவா 24:17)

19 அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார்; அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய். (சங். 91:4)

20 தேவனே, உம்முடைய கிருபை எவ்வளவு அருமையானது! அதினால் மனுபுத்திரர் உமது செட்டைகளின் நிழலிலே வந்தடைகிறார்கள். (சங். 36:7)

21 என் ஆத்துமாவை மரணத்துக்கும், என் கண்ணைக் கண்ணீருக்கும், என் காலை இடறுதலுக்கும் தப்புவித்தீர். (சங். 116:8)

22 நான் என் வார்த்தையை உன் வாயிலே அருளி, என் கரத்தின் நிழலினால் உன்னை மறைக்கிறேன். (ஏசாயா 51:16)

23 நீர் ஏழைக்குப் பெலனும், நெருக்கப்படுகிற எளியவனுக்குத் திடனும், பெரு வெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலமும், வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமானீர். (ஏசா. 25:4)

24 தேவரீர் என்னை ஆசீர்வதித்து, என் எல்லையைப் பெரிதாக்கி, உமது கரம் என்னோடிருந்து, தீங்கு என்னைத் துக்கப்படுத்தாதபடிக்கு அதற்கு என்னை விலக்கிக் காத்தருளும். (1 நாளா 4:10)

25 நீர் எனக்குத் துணையாயிருந்ததினால், உமது செட்டைகளின் நிழலிலே களிகூருகிறேன். (சங். 63:7)

26 நான் உன்னைப் பொல்லாதவர்களின் கைக்குத் தப்புவித்து, உன்னைப் பலவந்தரின் கைக்கு நீங்கலாக்கி விடுவிப்பேன் என்றார். (எரே. 15:21)

27 கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார். (சங். 121:7)

28 அவர் காற்றுக்கு ஒதுக்காகவும், பெருவெள்ளத்துக்குப் புகலிடமாகவும், வறண்ட நிலத்துக்கு நீர்க்கால்களாகவும், விடாய்த்தபூமிக்குப் பெருங்கன்மலையின் நிழலாகவும் இருப்பார். (ஏசா. 32:2)

29 கர்த்தர் உன்னைக் காக்கிறவர்; கர்த்தர் உன் வலது பக்கத்திலே உனக்கு நிழலாயிருக்கிறார். (சங். 121:5)

30 தீங்குநாளில் அவர் என்னைத் தம்முடைய கூடாரத்தில் மறைத்து, என்னைத் தமது கூடாரமறைவிலே ஒளித்துவைத்து, என்னைக் கன்மலையின்மேல் உயர்த்துவார். (சங். 27:5)



# SJ SAVES TRUST

## நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை

- *பசியுள்ளவனிடத்தில் உன் ஆத்துமாவைச் சாய்த்து, சிறுமைப்பட்ட ஆத்துமாவைத் திருப்தியாக்கினால், அப்பொழுது இருளில் உன் வெளிச்சம் உதித்து, உன் அந்தகாரம் மத்தியானத்தைப் போலாகும். ஏசாயா 58:10*
- *எப்பொழுதும் நன்மை செய்ய நாடுங்கள். 1 தெச.5:15*
- *சகோதரரே, நீங்கள் நன்மை செய்வதிலே சோர்ந்து போகாமலிருங்கள். 2தெச.3:13*

கடந்த பிப்ரவரி மாதம் சேலம் மாவட்டத்தில் உள்ள அக்ரஹாரம் பகுதியில் நம் டியூஷன் சென்டரில் படிக்கிற 100 ஏழை எளிய மாணவ, மாணவியர்களுக்கு தேர்வுக்கு தேவையான பள்ளி உபகரணங்கள், மருந்து மற்றும் சத்துபொருட்கள், அடிப்படை தேவைக்குரிய பொருட்கள், நல்ல சாப்பாடு வகைகள் அனைத்தும் S.J.Saves Trust மூலமாக வழங்கப்பட்டது.

கடந்த மார்ச் மாதம் சேலம் மாவட்டத்தில் உள்ள சக்திநகர், ஏரிக்காடு, பத்தாங்கள் மேடு, கருமாபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள டியூஷன் சென்டரில் படிக்கிற 200 ஏழை, எளிய மாணவ மாணவியர்களுக்கு தேர்வுக்கு தேவையான பள்ளி உபகரணங்கள், மருந்து மற்றும் சத்துபொருட்கள், அடிப்படை தேவைக்குரிய பொருட்கள், நல்ல சாப்பாடு வகைகள் அனைத்தும் S.J.Saves Trust மூலமாக வழங்கப்பட்டது.

### பிள்ளைகளுக்கு கொடுக்கப்பட்ட பொருள்களின் விபரங்கள்:

**மருந்து மற்றும் சத்துபொருட்கள்:** வைட்டமின் டானிக், கா.ஃப் சிரப், புரோட்டின் பவுடர்,

**தேர்வுக்கு தேவையான பொருட்கள்:** பரீட்சை அட்டை, 2 குயர் பேப்பர், பேனா, பென்சில், ரப்பர், ஜாமன்ட்ரிபாக்ஸ், ஸ்கேல் மற்றும் நோட்டு.

**அடிப்படை தேவைக்குரிய பொருட்கள்:** சோப், பேஸ்ட், பிரஸ், தேங்காய் எண்ணெய்,

சிறப்பு விருந்தாக சிக்கன் பிரியாணி, இனிப்பு மற்றும் கார வகைகள் அனைத்தும் மாணவ மாணவியர்களுக்கு வழங்கப்பட்டது. பிள்ளைகள் அனைவரும் மகிழ்ச்சியுடன் சாப்பிட்டு Dr. ஆனந்த ஸ்திரா அவர்களுக்கு நன்றி கூறி சென்றார்கள்.

இந்த உதவிகளை செய்வதற்கு மாதந்தோறும் உற்சாகமாய் தாங்கி வருகிற அன்பு பங்காளர்களை கர்த்தர் தாமே சம்பூரணமாய் ஆசீர்வதிப்பாராக.

## ஏழை எளியவர்களுக்கு உதவி செய்ய

*Bank A/c. Name : S J SAVES TRUST*
*Account No. 019150310875369*
*Bank Name : Tamilnadu Mercantile Bank*
*Branch : Palakarai, Trichy*
*IFSC Code : TMBL 0000019*
*A/c Type : Current*

## மருத்துவமனை பணிகளுக்கு உதவி செய்ய

*Bank A/c. Name : S J SAVES TRUST*
*Account No. 36477148891*
*Bank Name : State Bank of India*
*Branch : Cantonment, Trichy Main Branch*
*IFSC Code : SBIN 0000930*
*A/c Type : Current*

# சேலம் மாவட்டம் அக்ரஹாரம், சக்தி நகர், ஏரிகாடு, பத்தாங்கள் மேடு, கருமாபுரம் ஆகிய பகுதிகளில் செய்யப்பட்ட அறப்பணிகள்



# S.J.S.T. மருத்துவமனை பணிகள்

S.J.S.T மருத்துவமனை பணிகள் அனைத்தும் தேவகிருபையால் நல்லமுறையில் நடைபெற்று வருகிறது. இரட்சிக்கப்பட்ட உண்மையான ஒரு அக்கவுண்டன்ட் பெண் பணியாளர் மற்றும் Diploma in Pharmacist உடனடியாக தேவைப்படுகிறார்கள். உங்களுக்கு தெரிந்தவர்கள் யாராவது இருந்தால் அறிமுகம் செய்து வைக்கலாம். நமது மருத்துவமனை அப்பகுதி மக்களுக்கு கலங்கரை விளக்காக ஒளி வீசுகிறது.

இங்கு வேலை செய்யும் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் எக்ஸ்–ரே டெக்னிசியன் அனைவருக்காகவும் ஜெபியுங்கள். இந்த வருடம் மிகவும் அத்தியாவசியமாக செய்ய வேண்டிய மருத்துவமனை விரிவாக்கப்பணிக்காகவும், கட்டிடங்கள் கட்டப்படவேண்டியுள்ளது. இதில் அறுவை சிகிச்சை அரங்கம், அவசர சிகிச்சை பிரிவு மற்றும் இப்பொழுது இருக்கிறதை பார்க்கிலும் அதிக நோயாளிகள் வருகிறபடியால் அவர்களுக்கு ஏற்றபடி வசதியான அறைகள் மற்றும் செவிலியர்கள் தங்குவதற்கான அறைகள், ரெஸிடென்சியல் மருத்துவர்களுக்கு தேவையான அறைகள் கட்டப்பட ஜெபியுங்கள். இதற்கு மொத்தம் 25,000 சதுரடிக்கு கட்டிடம் கட்டவேண்டும். இந்த கட்டுமானப் பணிக்கு பல லட்சங்கள் தேவைப்படுகிறது. இதன் தேவைகளுக்காக ஜெபியுங்கள்.

நமது மருத்துவமனையில் குறைந்த கட்டணத்தில் அதனை சுற்றியுள்ள கிராம மக்களுக்கு உதவியாக ஏற்படுத்தப்பட்டபடியால் வரவிற்கும், செலவிற்கும் சரியாக உள்ளது. அநேக சமயங்களில் சகோதரனை உண்மையாக நேசிக்கக்கூடிய சகோதர, சகோதரிகளின் உதவியினால் மருத்துவமனைக்குரிய தேவைகள் சந்திக்கப்படுகிறது. இந்த அறப்பணி தொடர ஜெபிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். (மத்தேயு 25:33–40)

குறிப்பு : S.J.S.T மருத்துவமனை முற்றிலும் விசுவாசத்தாலும் உங்கள் ஜெபத்தாலும் தான் நடைபெறுகிறது. (நீதி. 19:17; 28:27; 22:9) பிறருடைய கஷ்டங்களை புரிந்து உதவி செய்யும் பொழுது நிச்சயமாய் நமது கஷ்டங்களையும், தீராத வியாதிகளையும் கர்த்தர் நீக்குவார்.

**அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சி நேரங்கள்**

**தமிழில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

நம்பிக்கை TELEVISION

வியாழன். வெள்ளி. சனி. ஞாயிறு
இரவு 8.30 முதல் 9.00 வரை

**தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

புதன். வியாழன். வெள்ளி.
இரவு 7.00 முதல் 7.30 வரை

**மலையாளத்தில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

சனி
இரவு 7.30 முதல் 8.00 வரை



# உலக செய்திகள்

நம் நாட்டில் 543 லோக்சபா தொகுதிகளுக்கு 7 கட்டங்களாக ஓட்டுப்பதிவு நடத்தப்படுகிறது. முதல் கட்டமாக தமிழகம், புதுச்சேரி உட்பட 22 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் ஓட்டுப்பதிவு ஏப்ரல் 19ம் தேதி நடக்கிறது. அதற்கான வேட்புமனு தாக்கல் மார்ச் 20ம் தேதியே தொடங்கிவிட்டது. லோக்சபாதேர்தலுடன் 4 மாநிலங்களுக்கு சட்டசபைத் தேர்தல், 26 சட்டசபைத் தொகுதிகளுக்கு இடைத்தேர்தலும் நடத்தப்படுகிறது. ஜூன் 4–ம் தேதி முடிவுகள் அறிவிக்கப்படும்.

நாடு முழுவதும், இதற்கு முன்பு, லோக்சபா தேர்தல் 2019–ம் ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் 7 கட்டமாகநடத்தப்பட்டது. அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட 17வது லோக்சபாவின் பதவிக் காலம் 2024 ஜூன் 16ம் தேதி நிறைவடைகிறது.

லோக்சபா தேர்தலை நியாயமாக, அமைதியாக நடத்த தேர்தல் கமிஷன் உறுதி கொண்டுள்ளது. இது உலகிலேயே மிகப்பெரிய தேர்தல் ஆகும். இதில் 96.8 கோடி வாக்காளர்கள் வாக்களிக்க இருக்கின்றனர். இது ஐரோப்பிய நாடுகளின் மொத்த மக்கள் தொகை எண்ணிக்கையை விட அதிகம் ஆகும்.

| தேர்தல் | மொத்த இடம் | மாநிலம் / யூனியன் | ஓட்டுப் பதிவு |
|---|---|---|---|
| 1ம் கட்டம் | 102 | 21 | ஏப்ரல் 19 |
| 2ம் கட்டம் | 89 | 13 | ஏப்ரல் 26 |
| 3ம் கட்டம் | 94 | 12 | மே 7 |
| 4ம் கட்டம் | 96 | 10 | மே 13 |
| 5ம் கட்டம் | 49 | 8 | மே 20 |
| 6ம் கட்டம் | 57 | 7 | மே 25 |
| 7ம் கட்டம் | 57 | 8 | ஜூன் 1 |

இதுவரை நடத்தப்பட்ட தேர்தல்களில் இருந்த கிடைத்த அனுபவத்தைக் கொண்டு, இந்த தேர்தலில் வன்முறை, பணபலம், வதந்திகள், விதிமுறை மீறல் என 4 சவால்களை தேர்தல் கமிஷன் அடையாளம் கண்டுள்ளது.

ஓட்டுப் பதிவு, ஓட்டு எண்ணிக்கையின் போது வன்முறையை தடுக்க போதுமான துணை ராணுவப் படை நிறுத்தப்படும். டிரோன் மூலம் மாநில எல்லைப் பகுதிகள் கண்காணிக்கப்படும்.

சமூக வலைதளங்களில் பொய்யான செய்திகள், வதந்திகள் பரப்புவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். மத ரீதியில் மற்றும் தனிப்பட்டமுறையில் பேசுவதை கட்சிகளின் பேச்சாளர்கள் தவிர்க்க வேண்டும். பிரச்சாரத்தில் குழந்தைகள், மாற்றுத் திறனாளிகளை ஈடுபடுத்தக் கூடாது.

**மார்த்தாண்டத்தில்**

## அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்

ஏப்ரல் 6 சனிக் கிழமை

இடம் : YMCA HALL,
வெட்டு வெண்ணி ஜங்சன்,
மார்த்தாண்டம்.

நேரம் : காலை 9.30 மணி முதல்
மதியம் 2.00 மணி வரை

**திருநெல்வேலியில்**

## குடும்பங்களுக்கான ஆலோசனை மற்றும் பங்காளர் சந்திப்பு

இடம் : செல்வி மஹால்,
காளிமார்க் பேருந்து நிறுத்தம் அருகில்,
முருகன்குறிச்சி, பாளையங்கோட்டை,
திருநெல்வேலி.

ஏப்ரல் 7 ஞாயிற்றுக் கிழமை

நேரம் : மாலை 3.00 மணி முதல்
இரவு 8.00 மணி வரை

## தேவ செய்தி: Dr. ஆனந்த ஸ்திரா

தொடர்புக்கு : 0431 - 2741922 & 94888 45627




## அன்பரின் ஊழிய சமூக வலைத்தள விபரங்கள்

**facebook**
Ministry of Jesus
My Deliverance Church
Ananda Stira
Margret Stira
Rev.Dr.A Joshua
Jane Joshua
Jonathanmosesstira

**Youtube**
Ministry of Jesus
My Deliverance Church
Dr Jane Joshua

**Twitter**
Ministry of Jesus
drjane15
My Deliverance Church
Jonathanstira

**Instagram**
ministryofjesus.in
dr.janejosh
mydeliverancechurch
Jonathanmosesstira

info@mojindia.org

www.ministryofjesus.in
www.mydeliverance.church
www.sjsavestrust.in

செகந்திராபாத்தில்

## அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்

ஏப்ரல் 13 சனிக் கிழமை

இடம் : YMCA Cellar AC Hall,
(backside of the main building)
S.P Road, யசோதா மருத்துவமனை எதிரில்,
மணிக்கூண்டு அருகில், செகந்திராபாத்.

நேரம்
காலை 9.30 மணி
முதல் 2.00 மணி வரை

தேவ செய்தியாளர்கள்

**Dr. ஆனந்த ஸ்திரா & Dr.ஜேன் ஜாஷ்வா**

தொடர்புக்கு : 99445 36343 & 94888 45627

---

ஈரோட்டில்

## அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்

இடம் : CSI பாரிஸ் ஹால்,
டெலிபோன் பவன் அருகில்,
பிரப் ரோடு, ஈரோடு.

மே 4 சனிக் கிழமை

நேரம் : காலை 9.00 மணி முதல் 2.00 மணி வரை

கோயம்புத்தூரில்

## அற்புதத்தின் மாலை

இடம் : TELC சபா மண்டபம்,
மணிக்கூண்டு அருகில்,
டவுண் ஹால், கோயம்புத்தூர்.

மே 5 ஞாயிற்றுக் கிழமை

நேரம் : மாலை 5.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை



தேவ செய்தி **Dr. ஆனந்த ஸ்திரா**
**Mrs. மார்கிரேட் ஸ்திரா**

கூட்ட முடிவில் தனி ஜெபம் ஏறெடுக்கப்படும்.

தொடர்புக்கு: 94888 45627, 0431 – 2741925

---

# We are Hiring!!!

**ACCOUNTANT**

(B.com. / M.com. Graduates)
Skills Required : Tally ERP 9

*Apply to*
ministryofjesushr@gmail.com



# தேவாதி தேவன் அவருடைய நாம மகிமைக்காக செய்த அற்புதங்களில் சிலவற்றை உங்கள் ஆசீர்வாதத்திற்காக பிரசுரிக்கிறோம்

## அரிப்பு வியாதி நீங்கியது!



நான் பல ஆண்டுகளாக அரிப்பு வியாதியினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன். ஜனவரி மாதம் ஈரோட்டில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துக் கொண்டேன். செய்தி முடிந்து Rev.Dr.A.ஜாஷ்வா அவர்கள் ஜெபவேளையில் வியாதியஸ்தர்களுக்காக விசேஷமாக ஜெபித்தார்கள். நானும் அவர்களோடு இணைந்து என்னுடைய வியாதிக்காக ஜெபித்தேன். அப்பொழுது ஆண்டவருடைய தொடுதலை உணர்ந்தேன். அரிப்பு உள்ள இடத்தில் குளிர்ந்த தன்மை உண்டானது. இப்பொழுது அரிப்பு இல்லை. என்னைத் தொட்டு சுகமாக்கிய கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.

– திரு. கேசவன், காசிபாளையம், ஈரோடு.

## திருமண காரியத்தை வாய்க்கச் செய்த கர்த்தர்

எங்கள் குடும்பத்தின் பொருளாதார குறைவு காரணத்தினால் மகளுக்கு 29 வயது வரை திருமணம் நடைபெறவில்லை. மிகுந்த கவலையோடு கடந்த அக்டோபர் மாதம் Rev.Dr.A.ஜாஷ்வா அவர்கள் நாகர்கோவிலில் நடத்தின கூட்டத்தில் கலந்துக் கொண்டு ஜெபித்தேன். பாஸ்டர் அவர்களிடமும் சொல்லி மகளுடைய திருமணத்திற்காக ஜெபிக்கும்படி சொன்னேன். “நீங்கள் வரனைத் தேடி போக வேண்டாம். உங்களைத் தேடிவரன் வரும்” என பாஸ்டர் சொல்லி ஜெபித்து அனுப்பினார்கள். அதேப்போல ஜனவரிமாதம் 4–ம் தேதி தேவ கிருபையால் என் மகளுடைய திருமணம் நடைபெற்றது. கையில் இருந்த பணத்தில் மீதி எடுக்க கர்த்தர் கிருபை செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். ஜெபித்து ஆலோசனை தந்த பாஸ்டருக்கும் எங்கள் நன்றியை கூறிக் கொள்கிறோம்.

– திருமதி. பெர்லின், கன்னியாகுமரி.

## மான் கால்களைப் போலாக்கினார்



என்னுடைய காலில் உள்ள சில பெலவீனத்தின் நிமித்தம் என்னால் சரியாக பேலன்ஸ் பண்ணி நிற்க முடியாது. கால் தடுமாறும். கீழே விழுந்துவிடுவேன். இதனால் என்னுடைய திருமணமும் தள்ளிக்கொண்டே போனது. வீட்டில் என்னை எங்கும் தனியாக அனுப்பவும் மாட்டார்கள்.

ஈரோட்டில் நடைபெறுகிற கூட்டத்திற்கு தொடர்ந்து வந்துக் கொண்டிருக்கிறேன். இன்று Rev.Dr.A.ஜாஷ்வா அவர்கள் வியாதி யஸ்தர்களுக்காக ஜெபித்தார்கள். அந்த நேரத்தில் இயேசுகிறிஸ்துவின் வல்லமை என்மேல் இறங்கியது. என்னால் இப்பொழுது தடுமாறாமல் நன்றாக நடக்கமுடிகிறது. என் கால்களை மான்கால்களைப் போலாக்கிய கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன். பாஸ்டர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறேன்.

– சகோதரி. ரேவதி, ஈரோடு.

Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2022-2024 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month


சென்னையில்

அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்

நாள் : ஏப்ரல் 9
செவ்வாய் கிழமை
(அரசுவிடுமுறை)

இடம் : BKN SKIDMORE ஹால்,
ரித்தர்டன் ரோடு, வெப்பேரி, சென்னை.
நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை



தேவ செய்தியாளர்கள்
Dr. ஆனந்த ஸ்திரா - Mrs.மார்கிரேட் ஸ்திரா

தொடர்புக்கு : 94888 45627, 0431 - 2741922

நாகர்கோவிலில் அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்

நாள் : மே 1
புதன்கிழமை
(அரசு விடுமுறை)

இடம் : விஜயதா திருமண மண்டபம்,
WCC ரோடு, நாகர்கோவில்.

நேரம் : காலை 9.00 மணி முதல் 2.00 மணி வரை

தேவ செய்தியாளர்கள்
Dr. ஆனந்த ஸ்திரா Mrs.மார்கிரேட் ஸ்திரா

தொடர்புக்கு : 94888 45627, 0431 - 2741922

சென்னையில் உங்கள் விடுதலையின் நாள்



நாள் : மே 1
புதன்கிழமை
(அரசு விடுமுறை)

இடம் : J.J. மஹால், L.K.S. தங்கமாளிகை எதிரில்,
G.S.T. மெயின்ரோடு, கடப்பேரி, மேற்கு தாம்பரம், சென்னை.
நேரம் : காலை 9.30 மணி முதல் 1.00 மணி வரை

தேவ செய்தி: Rev. Dr. A. ஜாஷ்வா

தொடர்புக்கு : 94888 45627, 80987 42638


Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,